DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**STC.No.134/2025**

**2026-ம் ஆண்டு பிப்பரவரி திங்கள் 19- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.01 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 01 | தொழில் | - | தலைமை காவலர் 581 |
| பெயர் | - | திரு.கண்ணன் | வட்டம் | - | பொள்ளாச்சி |
| த/பெ | - | பாப்பையா | சமயம் | - | |
| கிராமம் | - | மேற்கு காவல் நிலையம், பொள்ளாச்சி | வயது | - | 46/2026 |
| சாதி | - | | | | |

**<u>19-02-2026</u>**

**( எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது பொள்ளாச்சி டவுன் மேற்கு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.09.2024-ம் தேதி மாலை 17.00 மணிக்கு ஷேக்கல்முடி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்த போது, நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. குமார் அவர்களுக்கு உதவியாக நானும், காவலர் 1554 திரு.ஜான்சன் ஷேக்கல்முடி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட சோலையார் டேம், வலதுகரை, முருகாளி எஸ்டேட், புதுக்காடு எஸ்டேட் ஆகிய பகுதிகளில் மதுவிலக்கு மற்றும் சூதாட்டம் சம்பந்தமாக கண்காணித்து வந்தபோது சிறப்பு உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி 18.00 மணிக்கு சோலையார் டேம், புதுகாடு பஸ்நிலையம் அருகில் கண்காணித்தபோது அங்கு நின்றுகொண்டிருந்த ஒரு நபர் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்க தனது பெயர் சங்கர் (வயது 54), த/பெ.முனியசாமி 17/115 புதுக்காடு, ஷேக்கல்முடி எனக் கூறி தனது பையில் வைத்திருந்த சுமார் 180 மி.லி அளவுகொண்ட Old Chef brandy என லேபிள் ஒட்டப்பட்ட 09 பாட்டில்களை ஆஜர்படுத்தி விசாரிக்க தான் சுயலாபம் கருதி அரசு அனுமதியின்றி விற்பனை செய்ய வைத்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காரணம் கூறி 18.15 மணிக்கு சிறப்புஉதவி ஆய்வாளர் கைது செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். பின்பு 18.15 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் எதிரியிடமிருந்து தடய பொருள்களை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்ய உதவியாக இருந்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் **(அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் தடய பொருட்களை 18.30 மணிக்கு ஷேக்கல்முடி காவல் நிலைய பின்புறம் வைத்து 09 பாட்டில்களில் இருந்த பிராண்டியை கீழே ஊற்றி அதில் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் அழிக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் அழித்தல் மகஜரில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் **(அந்த அழித்தல் மகஜரில் உள்ள 1-வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2 ஆககுறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் எதிரியுடன் 18.40 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண் 27/2024, ச/பி 4 (1) (C) TNP Amendment Act 2024 ன் படி சிறப்பு உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். பின்னர் எதிரியை பாராவசம் ஒப்புவித்து தக்க இரு நபர் ஜாமீனில் விடுவிக்க

உதவியாக இருந்தோம்.வழக்கு சம்பந்தமாக சிறப்பு உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

1. சம்பவயிடம் மெயின்ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். நேர் எதிரே வீடுகள் உள்ளது என்றால் இல்லை. ஷேக்கல்முடி காவல் நிலையத்திலிருந்து சம்பவயிடம் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் சுமார் 07 கி.மீ.தூரத்தில் உள்ளது. எதிரி மீது மதுபானத்தை வைத்திருந்ததாக வழக்குபதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் விற்க வைத்திருந்ததால் பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் சொன்னது போல சம்பவம் நடந்திருந்ததால் அங்கிருந்தவர்களுக்கு தெரிந்திருக்கும் என்றால் அந்த சமயத்தில் அங்கு யாரும் இல்லை. எதிரியிடம் மதுபானத்தை விற்பனைக்காக வைத்திருந்ததாக ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். சம்பவயிடம் குறித்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். 3-ம் நபருக்கு எதிரி மது பானத்தை விற்பனை செய்யும் போது கையும் கலவுமாக பிடித்தோமா என்றால் இல்லை. எதிரி மீது தனி நபர் புகார் கொடுத்துள்ளார்களா என்றால் தெரியவில்லை. எதிரியிடம் விற்பனை செய்து வைத்திருந்ததாக பணம் எதுவும் கைப்பற்றினோமா என்றால் இல்லை. எதிரி அரசு மதுபானத்தை வைத்திருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் டாஸ்மாக் கடையில் வாங்கியவை என்றால் சரிதான். எந்த அரசு கடையில் வாங்கினார் என்பதை விசாரித்து அரசு மதுபானக்கடையில் உள்ளவர்களை சாட்சியாக இவ்வழக்கில் முன்னிடவில்லை என்றால் உதவி ஆய்வாளர் விசாரித்திருப்பார். டாஸ்மாக் கடையில் ஒரு நபருக்கு எவ்வளவு விற்கவேண்டும் என்று அளவீடு உள்ளதா என்றால் தெரியவில்லை. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்களில் மொத்த அளவான 1.620 லிட்டர் என்பது டாஸ்மாக் கடையில் ஒரு தனி நபருக்கு விற்கக்கூடிய அனுமதிக்கப்பட்ட அளவு என்றால் தெரியவில்லை. வரையறுக்கப்பட்ட அளவை விட ஒரு நபர் மதுபானத்தை தனது உடைமையில் வைத்திருந்தாலும்,அல்லது விற்னைக்காக வைத்திருந்தாலும் குற்றம் என்றால் சரிதான். அரசு ஆணைப்படி ஒரு தனி நபர் தனது சொந்த உபயோகத்திற்கு 4.5 லிட்டர் மதுபானம் வைத்துக்கொள்ளலாம் என்றால் சரிதான். எதிரியை சம்பவயிடத்தில் கைதுசெய்து வழக்கு சொத்துக்களை கைப்பற்றி யிருந்தால் அங்கு உள்ளவர்களுக்கு தெரிந்துயிருக்கும் என்றால் சம்பவசமயத்தில் அங்கு யாரும் இல்லை. நான் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எதிரியை கைதுசெய்யவில்லை என்றாலும் எதிரியிடம் இருந்து ஏந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. புள்ளிவிவரக் கணக்கிற்காக உயர் அதிகாரி பதிவு செய்த வழக்கிறிக்கு வலுவூட்ட நான் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும்சம்பந்தம் அல்ல என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை :**</u> இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**STC.No.134/2025**

**2026-ம் ஆண்டு பிப்பரவரி திங்கள் 19- ம் நாள் வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.02 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 02 | தொழில் | - | 2-ம் நிலை காவலர் 1554 |
| பெயர் | - | திரு.ஜான்சன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | ராசையா | சமயம் | - | |
| கிராமம் | - | ஷேக்கல்முடி காவல் நிலையம், | வயது | - | 34/2026 |
| சாதி | - | | | | |

**<u>19-02-2026</u>**

**( எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது ஷேக்கல்முடி காவல் நிலையத்தில் 2-ம் நிலைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.09.2024-ம் தேதி மாலை 17.00 மணிக்கு ஷேக்கல்முடி காவல் நிலையத்தில் 2-ம் நிலைக் காவலராக பணிபுரிந்த போது, நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. குமார் அவர்களுக்கு உதவியாக நானும், தலைமைக்காவலர் 581 திரு.கண்ணன் ஷேக்கல்முடி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட சோலையார் டேம், வலதுகரை, முருகாளி எஸ்டேட், புதுக்காடு எஸ்டேட் ஆகிய பகுதிகளில் மதுவிலக்கு மற்றும் சூதாட்டம் சம்பந்தமாக கண்காணித்து வந்தபோது சிறப்பு உதவி ஆய்வாளருக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி 18.00 மணிக்கு சோலையார் டேம், புதுகாடு பஸ்நிலையம் அருகில் கண்காணித்தபோது அங்கு நின்றுகொண்டிருந்த ஒரு நபர் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் ஓட எத்தனித்தவரை சுற்றி வளைத்து பிடித்து விசாரிக்க தனது பெயர் சங்கர் (வயது 54), த/பெ.முனியசாமி 17/115 புதுக்காடு, ஷேக்கல்முடி எனக் கூறி தனது பையில் வைத்திருந்த சுமார் 180 மி.லி அளவுகொண்ட Old Chef brandy என லேபிள் ஒட்டப்பட்ட 09 பாட்டில்களை ஆஜர்படுத்தி விசாரிக்க தான் சுயலாபம் கருதி அரசு அனுமதியின்றி விற்பனை செய்ய வைத்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காரணம் கூறி 18.15 மணிக்கு சிறப்புஉதவி ஆய்வாளர் கைது செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். பின்பு 18.15 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் எதிரியிடமிருந்து தடய பொருள்களை கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்ய உதவியாக இருந்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் **(அந்த கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் தடய பொருட்களை 18.30 மணிக்கு ஷேக்கல்முடி காவல் நிலைய பின்புறம் வைத்து 09 பாட்டில்களில் இருந்த பிராண்டியை கீழே ஊற்றி அதில் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் அழிக்கப்பட்டது. என்னிடம் காட்டப்படும் அழித்தல் மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான் **(அந்த அழித்தல் மகஜரில் உள்ள 2-வது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.4 ஆககுறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் எதிரியுடன் 18.40 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண் 27/2024, ச/பி 4 (1) (C) TNP Amendment Act 2024 ன் படி சிறப்பு உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். பின்னர் எதிரியை பாராவசம் ஒப்புவித்து தக்க இரு நபர் ஜாமீனில் விடுவிக்க

உதவியாக இருந்தோம்.வழக்கு சம்பந்தமாக  சிறப்பு உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. சம்பவயிடம்  மெயின்ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். நேர் எதிரே வீடுகள் உள்ளது என்றால் இல்லை. ஷேக்கல்முடி காவல் நிலையத்திலிருந்து சம்பவயிடம் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் சுமார் 07 கி.மீ.தூரத்தில் உள்ளது. எதிரி மீது மதுபானத்தை வைத்திருந்ததாக வழக்குபதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் விற்க வைத்திருந்ததால் பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் சொன்னது போல சம்பவம் நடந்திருந்ததால் அங்கிருந்தவர்களுக்கு தெரிந்திருக்கும் என்றால் அந்த சமயத்தில் அங்கு யாரும் இல்லை. எதிரியிடம் மதுபானத்தை விற்பனைக்காக வைத்திருந்ததாக ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். சம்பவயிடம் குறித்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். 3-ம் நபருக்கு எதிரி மது பானத்தை விறப்னை செய்யும் போது கையும் கலவுமாக பிடித்தோமா என்றால் இல்லை. எதிரி மீது தனி நபர் புகார் கொடுத்துள்ளார்களா என்றால் தெரியவில்லை. எதிரியிடம் விற்பனை செய்து வைத்திருந்ததாக பணம் எதுவும் கைப்பற்றினோமா என்றால் இல்லை. எதிரி அரசு மதுபானத்தை வைத்திருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் டாஸ்மாக் கடையில் வாங்கியவை என்றால் சரிதான். எந்த அரசு கடையில் வாங்கினார் என்பதை விசாரித்து அரசு மதுபானக்கடையில் உள்ளவர்களை சாட்சியாக இவ்வழக்கில் முன்னிடவில்லை என்றால் உதவி ஆய்வாளர் விசாரித்திருப்பார். டாஸ்மாக் கடையில் ஒரு நபருக்கு எவ்வளவு விற்கவேண்டும் என்று அளவீடு உள்ளதா என்றால் தெரியவில்லை. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்களில் மொத்த அளவான 1.620 லிட்டர் என்பது டாஸ்மாக் கடையில் ஒரு தனி நபருக்கு விற்கக்கூடிய அனுமதிக்கப்பட்ட அளவு என்றால் தெரியவில்லை. வரையறுக்கப்பட்ட அளவை விட ஒரு நபர் மதுபானத்தை தனது உடைமையில் வைத்திருந்ததாலும்,அல்லது விற்னைக்காக வைத்திருந்தாலும் குற்றம் என்றால் சரிதான். அரசு ஆணைப்படி ஒரு தனி நபர் தனது சொந்த உபயோகத்திற்கு 4.5 லிட்டர் மதுபானம் வைத்துக்கொள்ளலாம் என்றால் சரிதான். எதிரியை சம்பவயிடத்தில் கைதுசெய்து வழக்கு சொத்துக்களை கைப்பற்றியிருந்தால் அங்கு உள்ளவர்களுக்கு தெரிந்துயிருக்கும் என்றால் சம்பவசமயத்தில் அங்கு யாரும் இல்லை. நான் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எதிரியை கைதுசெய்யவில்லை என்றாலும் எதிரியிடம் இருந்து ஏந்த பொருளும் கைப்பற்றவில்லை என்றாலும் சரியல்ல. புள்ளிவிவரக் கணக்கிற்காக உயர் அதிகாரி பதிவு செய்த வழக்கிறிக்கு வலுவூட்ட நான் தவறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும்சம்பந்தம் அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u> :** இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி.N.மீனாட்சி
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.